**DEPOSITION OF WITNESS**

**Judicial Form No. 53**

**(See Rule 42)**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | **CC No. 147/2024** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | **P.W.4** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர் செல்வம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | ஜெயராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.05.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் சங்கர் நகரில் வசித்து வருகிறேன். இந்திய ராணுவ வீரராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 18.09.2024 ஆம் தேதி அன்று இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு உதவி ஆய்வாளர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இபியில் சிவசங்கரன் என்பவர் வீட்டில் திருடு போனது சம்பந்தமாக வந்து ஆய்வு செய்தார்கள். நான் பக்கத்து வீடு என்பதால் எனது வீட்டின் விவரங்களையும் எழுதினார்கள். அங்கு வரைபடம் வரைந்து வரைபடத்தில் அருகில் உள்ள வீடுகள் பெயர் விவரங்களை எழுதினார்கள். அதற்கு ஆதரவாக காட்சி கையொப்பம் கேட்டார்கள். விவரங்கள் தெரிந்து கையொப்பம் செய்தேன். என்னுடன் நடராஜ் மற்றும் குமரேசன் என்பவரும் கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடைய தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சிவசங்கர் எனது உறவினரா என்றால் இல்லை. நான் மேற்படி சிவசங்கரின் வீட்டிற்கு அருகில் எத்தனை வருடங்களாக குடி இருக்கிறேன் என்றால் 25 வருடங்கள். சம்பவத்தைப் பற்றி சம்பவம் நடந்த அன்றே எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்க வந்த பொழுது தான் சம்பவத்தை குறித்து எனக்கு தெரியுமா என்றால் சரிதான். நான் பார்வை மகசர், வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன். மேற்படி பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் உள்ள முழு தகவல் எனக்கு தெரியுமா என்றால் முழு தகவல் தெரியாது, ஆனால் என் முன்னால் தான் இடத்தை அளந்து மற்றும் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள் சாட்சி கையெழுத்து கேட்டார்கள் நான் சாட்சி கையெழுத்து போட்டேன்.

2. பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் உள்ள முழு தகவல் எனக்கு தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிகளுக்கு எதிராக தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் தான் வரைபடம் வரைந்தார்கள் என்றால் சரிதான். மற்ற நபர்கள் வேறு யாருமில்லை என்றால் சரிதான். எத்தனை போலீசார் வந்தார்கள் என்றால் இரண்டு பேர். அவர்கள் எழுதிய ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் கையெழுத்து கேட்டதற்காக தான் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரிதான். சொன்ன தேதியில், சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும் சரியல்ல. போலீசார் சொல்லி சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் தான் நான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.

<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

வழக்கறிஞர் வைக்க வசதி உள்ளது என்றும், வீட்டில் அணுகி வழக்கறிஞர் வைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

<u>மறுவிசாரணை</u> இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.